[1981 செப்டம்பர் 1

திரு. இரா. கருப்பையா : இந்த பர்மா அகதிகள் வியாபாரம் செய்வதற்காக சாலை ஓரங்களில் பெட்டிக் கடைகள் வைக்க அனுமதிக்கப்பட்டு வியாபாரம் செய்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக இடங்களை ஒதுக்கி நிரந்தரமாக வியாபாரம் செய்ய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க தனியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத்தித்திட்டம்.

*வினா எண் 160— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கல்பட்டு மாவட்டத்தில் தீவிர கால்நடை திட்டத்தை செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்பட அரசு ஆணை நிலை எண். 1668, வேளாண்மை, நாள் 16–7–1981-ல் அனுமதி வழங்கியுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : செங்கல்பட்டு மாவட்டத்தில் தீவிர கால்நடைத் திட்டத்தைச் செயல்படுத்த எத்தனை தீவிர திட்டக் கிளைகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது? ஒவ்வொரு கிளைக்கும் எவ்வளவு செலவாகும் ? மொத்தத்தில் எத்தனை கிளைகள் ? மொத்தத்தில் எவ்வளவு செலவாகும்?

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் மண்டல செயற்கை முறை கருத் தரிப்பு நிலையம் சித்தலப்பாக்கத்திலும் பூவிருந்தவல்லியிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மொத்தம் 50 கிளை நிலையங்கள் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தத் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் மூலம் மதுரை மாவட்டத்தில் 3 இடங்களில்—வாடிப்பட்டி உசிலம்பட்டி—திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்

கோட்டை, தாம்பரம் (செங்கல்பட்டு மாவட்டம்) பண்ருட்டி (தென் ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் நடப்பு ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் துவங்குவதற்கும் சுமார் 25 லட்சம் ரூபாய் செலவாகிறது.

திரு. இரா. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரத்தில் தீவிரக் கால்நடைத் திட்டத்தை அமல் நடத்தி வருகிறார்கள் என்று சொன்னார்கள். அங்கு இதுவரையில் அதிகாரிகள் யாரும் நியமனம் செய்யப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அரசு நிலையாணை எண். 1668 வேளாண்மை நாள் 16–7–1981 இன்படி தேவையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அந்தத் திட்டம் விரைவில் செயல்படத் தொடங்கும்.

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையங்களிலுள்ள கழிப்பிடங்கள்.

வினா எண். 137—திரு. இரே. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையங்களில் கழிப்பிடங்களுக்குக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆம்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்களுக்குப் போக கட்டணம் வசூலிக்கப்படுவது அநியாயமாகும். டிக்கட் வாங்கிக் கொண்டு பஸ்ஸிலே பயணம் செய்கிறார்கள் கழிப்பிடங்களுக்குப் போகிற போது ** போல் நின்று கொண்டு கட்டணத்தை வாங்கிக் கொண்டு உள்ளே விடுவது என்பது அநியாயமாக இருக்கிறது. எனவே இந்த மாதிரிக் கட்டணம் வசூலிப்பதை அரசு நிறுத்துமா? பாரினிலிருந்து வருகிறவர்கள் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே இது குறித்து அரசு முடிவு என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.